# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 12.10.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களின் அறிவிப்புகள் மற்றும் சம்பவங்களைக் கூறும்போது, எந்த சஹாபாவைப் பற்றி கூறப்படுமோ அவர்களுடைய பிள்ளைகள் அவர்களது சந்ததிகள் கடிதம் மூலமாக அதனைப் பற்றி மகிழ்ச்சியை தெரிவிக்கின்றனர். மேலும் துஆ செய்வதற்கும் விண்ணப்பம் செய்வார்கள். துஆ செய்யுங்கள்! நாங்களும் எங்களுடைய வருங்கால சந்ததிகளும் இந்த கண்ணியத்தை பாதுகாக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இந்த கண்ணியம் எங்களது தந்தைவழிப் பாட்டனார்கள் மூலமாக தாய்வழிப் பாட்டனார்கள், தந்தைவழிப் பாட்டிகள், தாய்வழிப் பாட்டிகள் போன்றோர்களுக்கு காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பருடைய கையில் பைஅத் செய்ததனால் கிடைத்ததாகும். அல்லது அவர்கள் அந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்தார்கள். மேலும் நேரடியாக காலத்தின் இமாமிடமிருந்து அருளைப் பெற்றார்கள் என்பதனால் கிடைத்ததாகும் என்று கூறுகிறார்கள்.

ஆனால் எனக்கு ஒரு சம்பவத்தினால் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஒரு சிலர் உள்ளனர். அவர்கள் தங்களது பெரியவர்கள் மீது இவ்வாறும் ஆட்சேபனை செய்கிறார்கள் என நான் கேள்விப்பட்டேன். அதாவது அவர்கள் தவறிழைத்து விட்டார்கள். தனது தாய் தந்தையரை விட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்து விட்டனர். அவர்களது உள்ளத்தில் ஏற்பட்டுள்ள இந்த தவறான எண்ணங்கள், அந்த சான்றோர்களின் சரியான சம்பவங்கள் மற்றும் சரியான நிலைமைகள் பற்றி அறியாத காரணத்தினால் ஏற்பட்டதாகும்.

நான் அந்த சான்றோர்களின் சம்பவங்களை எடுத்துரைக்க ஆரம்பித்த போது இப்படிப்பட்ட தவறான சிந்தனைகளைக் கொண்ட ஒரு குடும்பம் அல்லது ஒரு நபர் என்னிடம் தொடர்பு கொண்டு கூறினார். அந்த சான்றோரின் அறிவிப்பை கூறி அவர்களைப் பற்றி என்னுள் எழுந்த சில சிக்கலான கேள்விகளை நீங்கள் தீர்த்து விட்டீர்கள். எனவே இந்த சம்பவங்களை எடுத்துரைப்பது தனது மூதாதையர்களைப் பற்றி சில குடும்பங்களின் நபர்களிடம் ஏற்படக்கூடிய தவறான எண்ணங்களை களைவதற்கும், அவர்களின் சந்ததிகளை ஜமாஅத்தின் அருகில் கொண்டு வருவதற்கும் காரணமாக அமைகின்றன.

எனவேதான் நான் இதனை கூறியும் வந்துள்ளேன். எனக்கு முன்பு வந்த கலீஃபாக்களும் கூறி வந்துள்ளனர். குறிப்பாக நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் சஹாபாக்களின் சம்பவங்களை எடுத்துரைக்கக்கூடிய ஒரு தொடர்ச்சியை ஏற்படுத்தினார்கள். ஓரளவு அதில் எடுத்துரைத்தார்கள். பிறகு அது இடையில் நின்று விட்டது. எனவே பெரியார்களின் சம்பவங்கள் மற்றும் நிலைமைகள் வரலாற்று சம்பவங்களை வரக்கூடிய சந்ததிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். இதன் மூலம் வரக்கூடிய சந்ததிகளுக்கு ஜமாஅத்துடன் உறுதியான தொடர்பும் ஏற்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு தர்பிய்யத்தும் கிடைக்க வேண்டும்.

இங்கு நான் இதனையும் கூறிக்கொள்கிறேன். ஜமாஅத்திலிருந்து தூரம் விலகிச் சென்ற சஹாபாக்களின் குடும்பத்தைச் சேர்ந்த சில நபர்கள், சில ஜமாஅத் சகோதரர்கள், அல்லது பொறுப்பாளர்கள் போன்றோரின் நடைமுறையைக் கண்டு விலகிச் செல்கிறார்கள். பிறகு நிலைமை எந்த அளவு வந்து விடுகிறது என்றால், அவர்கள், எங்களது மூதாதையர்கள் தவறிழைத்து விட்டார்கள் எனக் கூறத் தொடங்கி விடுகின்றனர். எனவே இப்படிப்பட்ட நபர்கள் சின்னச் சின்ன விசயங்களில் கோபம் கொள்வதற்குப் பதிலாக தனக்காகவும் இறைவனிடம் நேர்வழியில் நிலைநிற்பதற்கு துஆ செய்ய வேண்டும். மேலும் எவர்கள் காரண காரியங்களாக இருக்கிறார்களோ அவர்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும்.

எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். நமது மூதாதையர்கள் நன்றாக ஆராய்ந்து அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அல்லது அல்லாஹ்விடம் இருந்து நேரடியாக வழிகாட்டலைப் பெற்று அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். தற்போதைய சந்ததிகளிடம் தவறுகள் ஏற்படலாம். ஏனென்றால் அவர்களிடம் இறைவனுடன் முன்னவர்கள் கொண்ட தொடர்புகள் போன்று இல்லை. அந்த சான்றோர்களிடம் இருந்தது இவர்களிடம் இல்லை. ஆனால் அந்த சான்றோர்கள் தவறாக மாட்டார்கள். எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்! நேர்மை என்னவென்றால் தூய மனதுடன் இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் எப்பொழுதும் நேரான வழியில் நடத்துவானாக! ஒருபோதும் மார்க்கத்திலிருந்து விலகிச் செல்லக்கூடிய எந்தவொரு நிலைமையும் அவர்களுக்கும், நம்மில் எவருக்கும் ஏற்படக்கூடாது. அல்லாஹ்வின் விருப்பத்திலிருந்து விலகிச் செல்லக்கூடிய நிலையும் ஏற்படக் கூடாது. இப்படிப்பட்ட மக்கள் தானாகவே ஆராந்தால் அவர்களுக்கு இவை சின்னச்சின்ன விசயங்கள் ஆகும்; இதனை அவர்களது அறியாமை அல்லது தற்பெருமை மார்க்கத்திற்கு எதிராக நிறுத்தி மார்க்கத்திலிருந்து அவர்களை விலக்கி விட்டது என்பது தெரியவரும்.

எனவே சஹாபாக்களின் பிள்ளைகளில், இவ்வாறு ஏதாவது ஒரு காரணத்தினால் மார்க்கத்திலிருந்து விலகி இருந்தால் அல்லது ஜமாஅத் அமைப்பிலிருந்து விலகி இருந்தால், அவர்களது சுய சிந்தனைகள், எண்ணங்கள் அவர்களை ஆட்கொண்டுள்ளது; தற்பெருமை அவர்களை ஆட்கொண்டுள்ளது. அவர்கள் தனக்காக எப்பொழுதும் நேரான வழியில் செல்வதற்கு துஆக்கள் செய்ய வேண்டும். தனது மூதாதையர்களின் கருணையை நினைவில் கொள்ளுங்கள். அதில் மிகப்பெரிய கருணை, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு நமது இரத்தத்தில் இந்த அருளை ஓடச்செய்ததாகும். அல்லாஹ் சஹாபாக்களின் பிள்ளைகளை எப்பொழுதும் மார்க்கத்தில் நிலைநிற்கச் செய்வானாக! மேலும் அவர்களுக்காக துஆ செய்யக் கூடியவர்களாக திகழட்டுமாக! எந்த விதமானஆட்சேபனையும் அவர்களது உள்ளத்தில் எழாமல் இருக்கட்டுமாக!

இன்று நான், இந்த சிறிய முன்னுரைக்குப் பிறகு மீண்டும் சஹாபாக்களின் சம்பவங்களை எடுத்துரைப்பேன்.

முதல் சம்பவம்: **நூர் முஹம்மது சாஹிப் உடைய மகன் முஹம்மது பாஸல் சாஹிபின் அறிவிப்பாகும். கூறுகின்றார்கள்:**

ஒருநாள் இசா தொழுகைக்குப் பிறகு நான் மவ்லவி சுல்தான் ஹாமிது சாஹிபிடம் கூறினேன். மவ்லவி சாஹிப்! ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் மஹ்தி, மஸீஹ் என்று வாதம் புரிந்துள்ளார்களே! உண்மையில், இந்த வாதம் செய்யக் கூடியவர் உண்மையாளர் என்றால் இந்த சூழ்நிலையில் இறைவன் நமது நாட்டிலேயே அவரை அனுப்பி இருக்கிறான். ஒருவேளை நாம் அவரை கண்டறிவதிலிருந்து விலகியிருந்தோம் என்றால், பிறகு நான் இந்த சின்ன விசயத்தைக்கூட சகித்துக்கொள்ள மாட்டோமா? கொஞ்சம் அங்கு வரை சென்று அவரை சந்தித்து வரலாமே! இறைவன் நமது நாட்டிலேயே அவரை அனுப்பி இருக்கிறான். பிறகும் கூட நாம் அவரை கண்டறிவதிலிருந்து விலகியிருந்தோம் என்றால், அவர்களை காண்பதற்கு எந்த விதமான கஷ்டத்தையும் மேற்கொள்ளவில்லை என்றால் இது சரியா? என்றேன். மவ்லவி சாஹிப் நல்ல உள்ளம் கொண்டவர்களும் நன்கறிந்தவரும் ஆவார். அவர் கேட்ட உடனேயே பதில் கூறினார். கண்டிப்பாக செல்ல வேண்டும். நான் அவரிடம் உறுதியான வாக்குறுதியை வாங்கினேன். மவ்லவி சாஹிப் வாக்குறுதி வாங்கிய பிறகு கூட்டத்திலிருந்து எழுந்து சென்று விட்டார். பிறகு நான் தூங்கி விட்டேன்.

கூறுகின்றார்: அப்போது நான் கனவில் கண்டேன். ஒரு அழகான வீடு ஒன்று உள்ளது. அதற்கு ஏறக்குறைய நான்கு கதவுகள் இருந்தன. அதன் முகம் தெற்குப் பக்கம் நோக்கி இருந்தது. அதன் கிழக்குப் பக்கத்தில் ஒரு மைதானம் இருந்தது. அதில் ஒரு பெரிய கூட்டம் ஒன்று இருந்தது. அதில் வெண்ணிற ஆடை அணிந்த கண்ணயமிகுந்த விண்ணைச் சேர்ந்தவர்களாகத் தெரிந்தவர்கள் வட்டமாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களது எண்ணிக்கை ஏறக்குறைய 100 ஐ விட அதிகமாக இருந்தது. அவர்களுக்கு மத்தியில் நான் உட்கார்ந்திருந்தேன். திடீரென்று அந்த வீட்டின் கிழக்கு வாசலிலிருந்து ஒளிமிகுந்த ஒரு முகம், வெண்ணிற

முடி, வெண்ணிற தலைப்பாகை கொண்ட ஒரு நபர் வெளியில் வந்தார்கள். அவர்களது தோற்றம் இதுவரை எனது கண் முன்னே இருக்கிறது. அந்த ஜமாஅத்தினைப் பார்த்தார்கள். அந்த ஜமாஅத்தின் நடுவிலிருந்து நான் எழுந்து நின்றேன். அந்த ஒளிமிகுந்த நபர் என்னை நோக்கி ஆள் காட்டி விரலை நீட்டி கூறினார். அல்லாஹ் உங்களது அனைத்து பாவங்களையும் மன்னித்து விட்டான். உடனே எனது உள்ளத்தில் அந்த பெரியவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ற எண்ணம் போடப்பட்டது. எனது நாவு தரூது ஓத ஆரம்பித்தது. பிறகு நான் விழித்து விட்டேன். எனது உள்ளத்தில் எந்த அளவு மகிழ்ச்சி ஏற்பட்டதென்றால், இதற்குப் பிறகு எனக்கு தூக்கம் வரவில்லை. நான் எழுந்து தஹஜ்ஜுத் தொழுதேன். உள்ளத்தில், எப்பொழுது விடியும்; இந்தக் கனவை மவ்லவி சாஹிபிடம் கூற வேண்டுமே என்ற எண்ணம் தோன்றியது. காலையில் மவ்லவி சாஹிப் வந்தபோது, தொழுகைக்குப் பிறகு நான் இந்த கனவை கூறினேன். இதனைக் கேட்டதும் அவர், நீர் மிகவும் நற்பேறு பெற்றவராவீர் என்றார்.

**ஹஸ்ரத் சேக் அஸ்கர் அலி சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். தப்லீக் தொடர்பாக மக்களுக்கு இதன் பக்கம் கவனம் செலுத்துவது நன்மை பயக்கும். அதாவது இசா தொழுகைக்குப் பிறகு தூங்குவதற்கு முன்பு புதிதாக உளூ செய்து விட்டு இரண்டு ரக்அத் நஃபில் தொழ வேண்டும். அதில் எனது இறைவா! இந்த ஜமாஅத் உண்மை என்றால் எங்கள் மீது இதன் உண்மையை வெளிப்படுத்துவாயாக! என துஆ செய்ய வேண்டும்.

கூறுகின்றார்கள்: நான் 1900-ல் கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு பணியின் காரணமாக சென்ற போது, எனது ஒரு பழைய நண்பரான குஜராத் மாவட்டம், சாரஸா ஆலம்கீரைச் சேர்ந்த பணியாளர் சேக் முஹம்மது சாஹிபை என்னுடன் அழைத்துச் சென்றேன். அவர்களுக்கு தப்லீக் செய்தவாறு நான் இந்த வழிமுறையைக் கூறினேன். அவர் இவ்வாறு அமல் செய்தார். அல்லாஹ் அவருக்கு கீழ்க்கண்டவாறு கனவைக் காண்பித்தான். அவர், சாரஸா ஆலம்கீரிலுள்ள தனது வீட்டில் இருக்கிறார். மர்ஹூமான அவரது தந்தையும் இருக்கிறார். அவர் எந்த வீட்டில் இருக்கின்றாரோ அது மிகவும் பிரகாசமாக ஆகி விட்டது. மேலும் வானத்திலிருந்து ஒளியின் அலைகள் செல்வது போன்று தெரிந்தது. அது அவரது வீட்டை ஒளிமயமாக்கி விட்டது. அதற்கு பிறகு மிகவும் அழகிய தூய தோற்றத்தைக் கொண்ட ஒரு பெரியவர் தோன்றினார். சேக் முஹம்மது சாஹிபுடைய தந்தை தனது மகனை நோக்கி, இவர் இமாம் மஹ்தி ஆவார் எனக் கூறினார். தந்தையும், மகனும் ஹுஸுர் அவர்களை சந்தித்தனர். இவ்வாறு அழகிய காட்சிக்குப் பிறகு அவர்களது தூக்கம் கலைந்தது. விடிந்ததும் இந்த விசயங்களை என்னிடம் கூறினார். அவர் பைஅத் செய்வதற்கு கடிதம் எழுதுமாறு கூறினார். நான் அவரது பைஅத்திற்காக கடிதம் எழுதினேன். தற்போது, இறை அருளால் அவர்களது குடும்பம் அனைத்தும் அஹ்மதி ஆகும்.

**ஹஸ்ரத் உமர் பக்ஷ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் மாஸ்டர் மவ்லா பக்ஷ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் பட்டியாலாவிலுள்ள சங்கோஸ்னி மத்ரஸாவில் தலைமை ஆசிரியராக இருந்தேன். மழைக் காலத்திற்குப் பிறகு ஆகஸ்டு மாதத்தின் பருவக்கால விடுமுறையாக அது இருந்தது. எனக்கு ஹுஸுர் அவர்களை சந்திப்பதற்கு ஆர்வமாக இருந்தது. எனது மகன் அப்துல் கஃப்பார் மர்ஹூம் இரண்டு வயதுடையவனாக இருந்தான். அவனது உடம்பில் கட்டிகள் வந்திருந்தன. அது அவனுக்கு ஒன்றாக இருக்கவில்லை. நான் அதனைப் பற்றி கவலைப்படாமல் அங்கிருந்து சென்றேன். சர்ஹிந்த் உடைய மவ்லவி முஹம்மது தர்கி சாஹிபை உடன் அழைத்துக் கொண்டு ஹுஸுருடைய சன்னிதிக்கு சென்று பைஅத் செய்தேன். ஏறக்குறைய 1 மாதம் இங்கு கழித்து விட்டு வீட்டிற்குச் சென்றேன். அப்போது பையன் முழுமையாக நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதைக் கண்டேன். எனது மனைவி கூறினாள். நான் அவனை குளிப்பாட்டுவதை நிறுத்தி விட்டேன். கட்டிகள் சரியாகி விட்டன என்றாள்.

**ஹஸ்ரத் காஸி முஹம்மது யூசுப் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் ஏறக்குறைய 1898-ல் ஒரு கனவு கண்டேன். நான் உயர்வான ஒரு மலையின் உச்சியில், கிழக்குப் பகுதியை நோக்கி நிற்கின்றேன். எனது இரண்டு கைகளும் தோள்பட்டைக்கு நேராக இருக்கின்றன.

எனது வலது கையின் உள்ளங்கையில் சூரியனின் ஒளிமிக்க பகுதி பிரகாசமாக இருக்கின்றது. சந்திரனின் ஒளிமிக்க ஒரு பகுதி எனது இடது கையின் உள்ளங்கையில் 3 அடி உயரத்தில் வந்து நின்றது. கிழக்கிலிருந்து ஒரு ஆறு, மலைகளின் ஓரத்திலிருந்து தெற்கு நோக்கி ஓடுகிறது. ஆறு மற்றும் மலைக்கு இடையில் ஒரு பெரிய மைதானம் பசுமையாக உள்ளது. பிறகு இதன் விளக்கம் தெரிய வந்தது. மலைகள் என்பது கண்ணியம் மற்றும் மேன்மை என்றும், சூரியன் என்பது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் என்றும், சந்திரன் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முழு நிலவு என்றும், ஆறு என்பது விண்ணின் அறிவு என்றும், அது கிழக்கிலிருந்து மேற்கினை அருள் நிறைந்ததாக ஆக்கிவிடும் என்றும், சந்திரன் கையிலிருந்து 3 அடி உயரமாக இருப்பது என்பது 3 வருடத்திற்குள் அஹ்மதிய்யத் கிடைக்கும் என்பதையும் வெளிப்படுத்தியது. இந்த வகையில் நான், 1898-ல் இந்த கனவு கண்டேன். எனக்கு 1901-ல் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது.

**பட்டியாலாவின் முன்னாள் காவல்துறை ஆய்வாளர் ஹஸ்ரத் சேக் முஹம்மது அஹ்ஸன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

1900-ல் கோடை காலமாக இருந்தது. ஒரு தொண்டர் டாக்டர் அஸ்மத்துல்லாஹ் சாஹிபுடன் பைஅத் செய்யும் எண்ணத்துடன் காதியான் சென்றார். மக்ரிப் நேரத்தில் காதியான் சென்றடைந்தார். காதியானின் விருந்தினர் அறையில் தனது படுக்கையை வைத்து விட்டு மஸ்ஜித் முபாரக் சென்றார். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் மக்ரிப் தொழுகைக்காக வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். கொஞ்சம் இருட்டாக இருந்தது. அவர்கள் பருமனான உடலைக் கொண்டவராகத் தோன்றியது. ஏனென்றால் இவர் நகரில் வாழ்ந்து வந்தவர் ஆவார். சைத்தான் அவரது உள்ளத்தில் அவர் பருமனானவராக ஏன் இருக்கக் கூடாது. நவூதுபில்லாஹ். இருட்டின் காரணமாக சரியாக பார்க்க முடியாததால் அவரது உள்ளத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி இவ்வாறான எண்ணம் தோன்றியது. சைத்தான் அவரது உள்ளத்தில் இவர் குண்டாக ஏன் இருக்கக் கூடாது? இவர் மக்களின் பணத்தை நன்றாக சாப்பிடுவார் என்ற எண்ணம் தோன்றச் செய்தான். பிறகு உள்ளேயிருந்து பெண்கள் பலர் பேசக்கூடிய சப்தம் கேட்டது. பிறகு உள்ளத்தில் குழப்பம் ஏற்பட்டது. உள்ளத்தில், இவர் நன்னடத்தை கொண்டவர் என்பதை எப்படி தெரிவது என்ற எண்ணத்தையும் சைத்தான் தோன்றச் செய்தான். உள்ளத்தில் மிகவும் கடினமான போராட்டம் நடந்தது. முழு உடலும் வியர்த்தது. நஃப்ஸ் புதிய புதிய கெட்ட எண்ணங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி தோன்றச் செய்தது. நான் தொழுகையில் துஆ செய்தேன். இந்த மனிதர் உண்மையாளர் என்றால் இவரது வாசலிலிருந்து தோல்வி அடைந்தவனாகவும் ஏமாற்றத்துடனும் செல்லக் கூடாது. உள்ளத்தில் எந்தவிதமான சீர்திருத்தமும் ஏற்படவில்லை. தொழுகைக்குப் பிறகு விருந்தினர் அறைக்கு திரும்பி வந்தேன். இப்படிப்பட்ட நிலையில் பைஅத் செய்வது சரியல்ல என முடிவு செய்தேன். நான் இசா தொழுதேனா இல்லையா? என நினைவில்லை. தொழுதேன் என்றால் எங்கு தொழுதேன் என்பதும் நினைவில் இல்லை. வருத்தத்துடன் தூங்கி விட்டேன். இரவு (கனவில்) 2 அல்லது 3 மணி அளவில் ஒரு மனிதர் எனது கழுத்தைப் பிடித்தவாறு கட்டிலிலிருந்து என்னை நிற்கச் செய்தார். எந்த அளவு எனது கழுத்தை நெறித்தார் என்றால் உயிர்போகக்கூடிய நிலைக்கு சென்று விட்டது. மிர்ஸா யார் என்பது உனக்கு தெரியாதா? என்றார். இவர் எப்போதும் பொய் கூறாதவர் ஆவார். தனது வாதத்தில் முற்றிலும் உண்மையானவர் ஆவார். இதனை தவிர வேறேதாவது எண்ணம் கொண்டால்...? என எச்சரித்தவாறு என்னை கட்டிலில் சாய்த்தார். இது எவ்வளவு கொடூரமான கனவு என்றால், பயந்துபோய் எனது கண்கள் திறந்தன. அப்போது எனது கண்களில் கண்ணீர் இருந்தது. எனது கழுத்து யாரோ உண்மையில் நெறித்தது போன்று இருந்தது. ஆனால் இவை அனைத்தும் கனவுக் காட்சிகள் ஆகும்.

உள்ளத்திடம் இப்போதும் மிர்ஸா சாஹிபைப் பற்றி ஏதாவது சந்தேகம் உள்ளதா? என்றார். உள்ளம் முற்றிலும் இல்லை என்றது. காலையில் மிர்ஸா சாஹிபை சந்தித்தேன். அப்போது தெரிய வந்தது. அன்னார் வானத்தில் இருந்து இறங்கிய ஒரு வானவர் ஆவார். சாதாரண உடலைக் கொண்ட ஒரு மனிதர் ஆவார். அவரது ஒவ்வொரு அசைவிலும் உயிரை அர்ப்பணிப்பதற்கு உள்ளம் நாடியது. ஹுஸூர் அவர்கள் முன்னால் வரும்போது அடக்க முடியாமல் அழுகை வந்து விடும். ஹுஸூர் அன்பிற்குரியவராகவும், இந்த அடியான் அன்பு

செலுத்தக் கூடியவனாகவும் இருந்தேன். மிகவும் மகிழ்ச்சியுடன் பைஅத் செய்தேன். இறைவன் சைத்தானின் பிடியிலிருந்து காப்பாற்றி, மஸீஹ்வுடைய வாசலில் கட்டாயப்படுத்தி கொண்டு வந்து சேர்த்தான். இல்லையென்றால், நான் வழிகெட்டுப் போவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருந்தன.

**ஹஸ்ரத் காயிமுத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் கனவில் கண்டேன். நான் எனது கிராமத்தின் பள்ளிவாசலிலிருந்து தொழுது விட்டு எழுந்தேன். ஊர் மக்கள் பெரிய துன்பம் ஒன்று வந்துள்ளது. அது முழு உலகையும் துடைத்து விட்டுச் சென்று விடும் என்றனர். நானும் கேட்டு உணர்ந்தேன். இந்த அனைத்தும் நம்மை சாப்பிட்டு விடும். கருப்புநிற கம்பை போன்று உள்ளது. அது அனைத்து வயலிலும் தென்படுகிறது. நான் மக்களிடம், சகோதரர்களே! இது நம்மை கண்டிப்பாக சாப்பிட்டு விடும் என்றேன். கொஞ்சம் இறைவனை நினைவு கூறுங்கள். அப்போது ஓரிருவர் எனது வலது கைவிரலை பிடித்தார்கள். அப்போது எனக்கு இது என்னை விடாது என்ற கவலை ஏற்பட்டது. அதாவது இந்த துன்பம் என்னை விடாது எனத் தோன்றியது. நான் இந்த கிருமியிடம், நீ இறைவனிடமிருந்தா வந்துள்ளாய்? எனக் கேட்டேன். அந்த கிருமி தான் விரலை பிடித்திருந்தது. அது 'ஆம்' என்று கூறியது. நான் மிர்ஸா சாஹிப் உண்மையாளரா? இல்லையா? எனக் கேட்டேன். அதற்கு அது உண்மையாளர் எனக் கூறியது. மேலும் நீ மிர்ஸா சாஹிபை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் நாங்கள் உம்மை கண்டிப்பாக சாப்பிட்டு விடுவோம். ஏனென்றால் அவர் உண்மையாளர் என்றது. மீண்டும் மீண்டும் மூன்று முறை மிர்ஸா சாஹிப் உண்மையாளர் என்ற சப்தம் வந்தது. பிறகு கண்கள் திறந்தன. பிறகு அவர் கூறுகின்றார்: நான் காலையில் எழுந்து அம்மாவிடம் வெள்ளிக்கிழமை எப்போது என்று கேட்டேன். அவர் நாளை மறுநாள் என்றார். பிறகு நான் ஜுமுஆ நாள் அன்று ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று பைஅத் செய்தேன்.

**ஹஸ்ரத் மியான் அமீர் பக்ஷ் சாஹிபின் மகன் ஹஸ்ரத் அல்லாஹ் ரக்கா சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர்கள் இருவரும் சஹாபிகள் ஆவர். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை கனவில் கண்டேன். கனவை உறுதிசெய்ய நான் நாரேவாலைச் சார்ந்த மர்ஹூம் மவ்லவி முஹம்மது தீன் சாஹிபுடன் காதியான் வந்தேன். கோடை காலமாக இருந்தது. மாதம் எதுவென்று நினைவில் இல்லை. மஸ்ஜிது முபாரக்கில் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். நாரேவாலைச் சேர்ந்த மவ்லவி அஹ்மது தீன் மர்ஹூம் தனது மூன்று வரி கவிதையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்த்துக்குரிய வாதத்தைப் பற்றியும், அந்த காலத்தில் மக்களின் குறும்புகளையும் சேட்டைகளையும் பற்றியும் எழுதப்பட்டிருந்தது. அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன் படித்தார். அதில் மவ்லவி சாஹிப் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தனது முதுகில் சுமந்தவாறு தவ்ர் குகைக்கு கொண்டு சென்றார்கள் என எழுதியிருந்தார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் சுமந்து கொண்டு செல்லவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களுடன் நடந்து சென்று குகையில் நுழைந்தார்கள். இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் அதன் பிரதியை அச்சிடுவதற்கு அனுமதி அளித்தார்கள். பிறகு உள்ளே சென்றார்கள்.

**ஹஸ்ரத் முஹம்மது ஃபாஸல் சாஹிப் (ரலி) கூறுகின்றார்கள்:**

நான் பைஅத் செய்வதற்கு மிகவும் துடிப்புடன் இருந்தேன். அங்கு ஹஸ்ரத் சாஹிப் ஆன்மீகத்தில் உள்ளத்தை எந்த அளவு மாற்றினார்கள் என்றால் அதனை எடுத்துக் கூற முடியாது. நான் ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிபிடம், எனது பைஅத்தைப் பற்றி எடுத்துக் கூறுங்கள் என்றேன். ஒவ்வொரு நாள் மாலையிலும் எனது பைஅத்தைப் பற்றி எடுத்துரைப்பார்கள். அதாவது முதல் கலீஃபாவிடம் எனது பைஅத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறுங்கள் என்பேன். ஹுஸூர் (அலை) அவர்கள் நாளை என்று கூறினார்கள். இதனால் எனது ஆர்வத்தின் தீ வாக்குறுதிக்கேற்ப அதிகமானது. அவர் பார்ஸி கவிதை ஒன்று கூறுகின்றார். அதன் பொருள்: அன்பிற்குரியவரை சந்திக்கக்கூடிய நேரம் அருகில் வந்தால் சந்திப்பின் நெருப்பு அதிகமாகும்.

கூறுகின்றார்: ஒரு வாரத்திற்குப் பிறகு எனது உள்ளம் இந்த முடிவை எடுத்தது. அதாவது நான் பைஅத்தை கனவிலேயே செய்து விட்டேனே! பிறகு அங்கிருந்து அனுமதியின்றி புறப்பட ஆரம்பித்தார். அடுத்த சில நாட்களில் பைஅத் செய்யாததால், தான் ஏற்கனவே பைஅத் செய்ததாக கருதி, நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்காமலேயே ஊருக்கு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு வந்ததும் நிம்மதியின்மையையும் ஆர்வமும் அதிகமானது. மீண்டும் ஒரு மாதத்திற்குப் பிறகு காதியான் புறப்பட்டேன். நான் முதல் கலீஃபாவின் கிளினிகில் நுழைந்ததும் அன்னார் என்னை நோக்கி சிரித்தவாறு கூறினார்கள். எவர் காலத்தின் இமாமின் அனுமதியின்றி செல்வாரோ அவருடன் இவ்வாறு தான் நடக்கும். அந்த வகையில் நான் காலத்தின் இமாமின் அனுமதியின்றி திரும்பிச் செல்வது சரியில்லை என்பதை புரிந்து கொண்டேன். பிறகு ஹுஸூர் (அலை) அவர்களை சந்தித்தேன். பைஅத் செய்ய வேண்டும் என வற்புறுத்தவில்லை. உள்ளத்தில் உறுதியும் நிம்மதியும் ஏற்பட்டது. இறுதியாக 22 நாட்களுக்குப் பிறகு வியாழக்கிழமை மாலை தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தாமே முஹம்மது பாஸில் பைஅத் செய்யுங்கள் என்றார்கள். நான் பைஅத் செய்தேன். இது 1899 உடைய கடைசி அல்லது 1900 வருடத்தின் ஆரம்ப நாட்கள் ஆகும்.

**ஹஸ்ரத் மியான் குலாம் முஹம்மது சாஹிப் ஃபபர்தா கூறுகின்றார்கள்:**

நான் முதலில் ஹனஃபியாக இருந்தேன். பின்னர் வஹாபி ஆனேன். இருந்தபோதிலும் நிம்மதி கிடைக்கவில்லை. உள்ளத்தில், இறைவன் இமாம் மஹ்தியை அனுப்ப வேண்டும் என ஆசை இருந்தது. பிறகு அவருடைய படையில் இணைந்து விடுவேன் என்று நினைத்தேன். ஒருமுறை எனக்கு ஹுஸூர் (அலை) அவர்களின் முகம் கனவில் காட்டப்பட்டது. நான் காதியான் சென்றேன். அதே போன்ற நபரைத் தான் கண்டேன். உடனே பைஅத் செய்து விட்டேன்.

**ஹஸ்ரத் ஹக்கீம் அப்துர் ரஹ்மான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

தனது தந்தை பற்றி கூறுகின்றார்கள். அவர்கள் பைஅத் செய்த சம்பவம் இவ்வாறாகும். அவர்கள் கூறி வந்தார்கள். இங்கு அலாவுத்தீன் என்ற ஒரு மவ்லவி இருந்து வந்தார். அவருக்கு இங்கு அருகாமையில் ஒரு பள்ளிவாசலும் உள்ளது. எனது தந்தை அவரிடம் படித்து வந்தார்கள். ஒருமுறை இசா தொழுகைக்காக ஒளூ செய்தவாறு எனது தந்தை மவ்லவி சாஹிபிடம் கேட்டார்கள். மவ்லவி சாஹிப்! இன்றைய நாட்களில் வானத்திலிருந்து அதிகமாக நட்சத்திரங்கள் விழுகின்றன. இதற்கு என்ன காரணம்? என்றார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் கூறினார்கள். இமாம் மஹ்தி வரப்போகிறார். அவரது வருகை பற்றி வானத்தில் மகிழ்ச்சி கொண்டாடப்படுகின்றது என்றார். தந்தை கூறி வந்தார்கள். நான் சில நாட்களுக்குப் பிறகு ஹுஸூரைப் பற்றிய செய்தியினைக் கேட்டேன். பிறகு காதியான் சென்று பைஅத் செய்து விட்டேன் என்றார்கள். திரும்பி வந்து மவ்லவி சாஹிபிடம் நான் பைஅத் செய்து விட்டு வந்து விட்டேன். இதனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்றேன். ஆனால் அவர் அமைதியாக இருந்தார். சிறிது நேரம் கழித்து மியான், விசயம் உண்மைதான். ஆனால் நாங்கள் உலகவாதிகளாக இருக்கின்றோம் என மெதுவாக கூறினார். அதாவது மவ்லவியாகவும் இருக்கின்றார்கள். உலகவாதியாகவும் இருக்கின்றார்கள்.

**ஹஸ்ரத் மியான் ரஹீம் பக்ஷ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

எந்த நாளில் ஹுஸூர் அவர்களது முபாஹிலா அப்துல் ஹக் கஸ்னவியுடன் அமிர்தசரஸில் நடைபெற்றதோ எனது தந்தை அந்த முபாஹிலாவில் இருந்தார்கள். அவர்கள் கூறி வந்தார்கள். எப்போது ஹுஸூர் துஆ செய்தார்களோ அப்பொழுது ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபிற்கு மயக்கம் வந்தது. அதனை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்கள் மிகவும் உருக்கத்துடனும் அழுகையுடனும் துஆ செய்தார்கள். அதனால் நிலைமை மோசமானது. தந்தை கூறுகின்றார்கள். ஹுஸூர் அவர்களைப் பார்த்து எனது உள்ளம் சாட்சி பகர்ந்தது. இவர் பூமியை சார்ந்தவர் அல்ல. மாறாக விண்ணைச் சேர்ந்தவர் ஆவார். எனவே அவர் இங்கு சுவண்டேவிற்கு வந்த பிறகு தனது சமூகத்தினரிடம் இதனைப் பற்றி கூறினார்கள். அது ஒரு அற்புதமான ஜமாஅத் ஆகும். வானவர்களைப் போன்றோர் ஆவர். நான் எனது தந்தை, எனது பெரியப்பா, முழு குடும்பமும் பைஅத் செய்தது.

**ஹஸ்ரத் சவுத்ரி ரஹ்மத் கான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

எனது பைஅத்தின் சம்பவம் இவ்வாறாகும். கனவில் நான் வீட்டிலிருந்து வெளியில் வந்தேன். வெளியில் ஹுஸூர் அவர்களுடன் சவுத்ரி மவ்லா பக்ஷ் பட்டி, சவுத்ரி குலாம் ஹுஸைன், மவ்லவி சம்சுதீன், மவ்லவி அலாவுதீன், மவ்லவி இனாயத்துல்லாஹ், ரஹ்மத்துல்லாஹ் ஜட் போன்றோர் நிற்கின்றனர். அவர்கள் பஜாரிலிருந்து வந்தார்கள். அப்போது சவுத்ரி மவ்லா பக்ஷ் சாஹிப் என்னிடம் இப்போது பைஅத் செய்யுங்கள் என்றார்கள். இதனை விட நல்ல நேரம் எப்போது கிடைக்கும். ஹுஸூர் அவர்களே இங்கு வந்துள்ளார்கள். நான் அவர்களுடன் இணைந்து கொண்டேன். இந்த குழு முழுவதும் முதலில் சவுத்ரி மவ்லா பக்ஷ் சாஹிபுடைய கிணற்றிற்கு சென்றது. பிறகு எங்களது கிணற்றிற்கு வந்தனர். அங்கு ஹஸ்ரத் சாஹிப் தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு நான் விழித்தேன். இதனை அவர் கனவில் பார்க்கிறார். ஹுஸூருடைய முகம் என்னுடைய உள்ளத்தில் எவ்வாறு பதிந்தது என்றால், ஒருபோதும் மறக்க முடியாததாக அது இருந்தது. காலையில் எழுந்து நான் வீட்டிற்கு வந்தேன். பயணத்திற்கு தேவையான பணம் வாங்கிக் கொண்டு காதியான் வந்தேன். மேலும் பைஅத் செய்தேன். மூன்று நாட்கள் அங்கேயே தங்கியிருந்தேன்.

இவ்வாறு அல்லாஹ், பலருக்கு கனவின் மூலமாக பிடித்து வைத்து பைஅத் செய்ய வைத்துள்ளான்.

**ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் பராஹீனே அஹ்மதிய்யா 1892 அல்லது 1893 -ல் படித்தேன். எனது உள்ளத்தில் நல்ல தாக்கத்தை அது ஏற்படுத்தியது. பிறகு நான் ஹஸ்ரத் சாஹிப் எழுதியது, அதற்கு எதிராக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி எழுதியது போன்றவற்றைப் பார்த்து வந்தேன். நான் முஹம்மது ஹுஸைன் உடைய ஆதாரங்களைப் படித்ததும், இவர் பலவீனமானவர் என்பதை புரிந்து கொண்டேன். இவரைப் பற்றி எந்த தாக்கமும் என்னிடம் ஏற்படவில்லை. ஹஸ்ரத் சாஹிபின் ஆதாரங்கள் உறுதியாகவும் இருந்தன. அதில் ஆன்மீகமும் வெளிப்பட்டன. ஒவ்வொருநாளும் அன்பு அதிகமாகிக் கொண்டே சென்றது. என்னிடம் ஆழமான விளைவை அது உண்டாக்கியது. ஆராய்வதை தொடர்ந்து செய்தேன். கனவுகள் வர ஆரம்பித்தன. 1897 -ல் நான் கனவில் கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என் முன்னால் இருக்கின்றார்கள். எனது முகம் கிழக்கு நோக்கி இருந்தது. ஹுஸூருடைய முகம் என்னை நோக்கி இருந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் உடைய வலது பக்கம் இருந்தார்கள். அப்போது எனது சிந்தனையின்படி அன்னாரது வயது 8 அல்லது 9 வயதாக இருக்கும். ஹஸ்ரத் சாஹிப் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹை நோக்கி சைகை காட்டினார்கள். பிறகு அவர்கள் கூறினார்கள். அந்த அஹ்மது அவர் வந்து விட்டார்; அவர் நபி ஆவார். முதலில் வந்த அஹ்மது நபி ஆவார். அவர் யாரையும் பின்பற்றி வந்தவர் அல்ல. ஆனால் இப்போதுள்ள அஹ்மது, இதனைப் பற்றி ஹஸ்ரத் சாஹிப் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹிடம் தற்போது என்பது யார்? எனக் கேட்டார்கள். அவர்கள் சைகையுடன் நீங்கள் தான் எனக் கூறினார்கள். முத்தகி நபி ஆவீர்கள். அதாவது இந்த நபி முதல் அஹ்மதை பின்பற்றி வந்தவர். அவர்தான் இந்த அஹ்மது என்று கூறினார்கள். இதற்குப் பிறகு நான் பைஅத்திற்கான கடிதத்தை எழுதினேன். சிறிது காலம் கழிந்த பிறகு நான் காதியான் சென்றேன். ஹஸ்ரத் சாஹிப் கையில் பைஅத் செய்தேன்.

**ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹுஸூருக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. ஜனாபிற்கு உலகின் தலைவரின் சலாம் தூரம் தொலைவிலிருந்து வந்தது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்ற தூதுச் செய்தி, ஹதீஸின் அடிப்படையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கட்டளையாகிய என்னுடைய மஸீஹிற்கு சலாம் கூறுங்கள் என்ற அடிப்படையில் பெரும்பாலும் தூரம் தொலைவிலிருந்து வந்தன. எனக்கு இதுதான் சிந்தனையாக இருந்தது.

பார்ஸியில் ஒரு நீண்ட வரிகள் உள்ளது. பீர்கள் பணிவுடனே இருப்பார்கள். ஆனால் முரீதுகள் அவர்களை உயர தூக்கி விடுவார்கள். உண்மை விசயம் என்னவென்றால், இவர்களுக்கு எந்த சிறப்பும் இல்லை. மாறாக மக்கள் ஒன்றிணைவதால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முக்கியத்துவம் ஏற்படுகின்றது.

கூறுகின்றார்கள்: இறுதியாக அக்ஸா பள்ளிவாசலில் உருக்கத்துடன் துஆ செய்தேன். அப்போது அல்லாஹ் என் மீது ஒரு மறைவான கஜானாவை திறந்தான். அதனை எழுதுவதற்கு ஒரு நீளமான காகிதம் தேவைப்படும். நான் பைஅத் செய்தேன். அமைதியும், நிம்மதியும் கிடைத்தது. உருக்கத்துடன் துஆ செய்த போது அல்லாஹ் உள்ளத்தை எவ்வாறு திறந்தான் என்றால் திருப்தி ஏற்பட்டது. பிறகு பைஅத் செய்தார். எண்ணங்கள், சைத்தானிய குழப்பங்கள் விலகிச் சென்றன.

**ஹஸ்ரத் சையத் விலாயத் சா சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் 1897 –ல் ஸியால்கோட் நகரின் அமெரிக்கன் மிசன் உயர்நிலைப் பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தேன். ஆரம்பத்தில் போர்டிங் ஹவுஸில் மாணவர் விடுதியில் இருந்து வந்தேன். பிறகு ஆங்கில ஆசிரியரின் பரிந்துரையின் அடிப்படையில் ஆகா முஹம்மது பாஸில் சாஹிப் உடைய இரண்டு சகோதரர்களுக்கு டியூட்டர் ஆக நியமிக்கப்பட்டேன். எனக்கு ஒரு தனி வீடு தங்குவதற்காக கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதம் பற்றி கேள்விப்பட்டிருந்தேன். இவர் தனது பழைய சடங்கு சம்பிரதாயத்தின்படி இல்லை. அதனால் ஆராய்வதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. இதனைத் தவிர பொதுமக்கள் ஹுஸூருடைய போதனைகளை தவறான முறையில் பரப்பி வந்தனர். அதனால் இதனைப் பற்றி கேட்பது கூட உள்ளத்தில் வெறுப்பை ஏற்படுத்தியது. சில நாட்களுக்குப் பிறகு நகரில் பிளேக் நோய் பரவியது. அதிக அளவில் மக்கள் மரணித்தனர். ஒருநாள் கீழே பஜாரில் பார்த்த போது பல ஜனாஸாக்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அவர்களது உறவினர்கள் அழுது கொண்டே சென்றனர். இந்த மோசமான நிலையைக் கண்டு எனக்கு சிந்தனை தோன்றியது. இது பரவக்கூடிய நோய் ஆகும். என்னையும் இது தாக்கலாம். ஒருவேளை எனக்கு மரணம் வந்தால் என்னைப் போன்ற மனிதன் இறைவன் முன்பு எந்த நல்ல அமல்களை எடுத்து வைப்பான். நல்ல அமல்கள் செய்வது இன்னொரு பக்கம் இருக்கட்டும். சிறு வயதில் தனது கிராமத்தில் பள்ளிவாசலில் உள்ள திருக்குர்ஆனை திலாவத் செய்யாத காரணத்தால் மறந்து விட்டாய். நன்மைகள் செய்வது ஒருபுறமிருக்கட்டும். சிறு வயதில் படித்த திருக்குர்ஆனையும் மறந்து விட்டாய். ஏனென்றால் அதற்குப் பிறகு அதனை படிக்கவில்லை.

கூறுகின்றார்: இது உண்மை தான். நான் எனது வகுப்பில் முதல் மாணவன் ஆவேன். ஆனால் மறுமையில் நீ ஆங்கிலம் மற்றும் கணிதம் போன்றவற்றில் எத்தனை மதிப்பெண் எடுத்தாய் என கேட்கப்படாது. இந்த சிந்தனையினால் எவ்வளவு வெட்கமாக இருந்தது என்றால் உள்ளத்தில் திருக்குர்ஆனை முழுமையாக யாரிடமாவது சரியான முறையில் ஓதுவேன் என உறுதியான எண்ணம் கொண்டேன்.

ஆரம்பத்தில் நானே திருக்குர்ஆனை ஓதினேன். ஆனால் எனக்கு தான் சரியாக ஓதுகின்றேனா? இல்லையா? என நம்பிக்கை வரவில்லை. அதற்குப் பிறகு ஏதாவது பள்ளிவாசலின் முல்லாவிடம் சென்று ஓதலாம் என நினைத்தேன். ஆனால் அவர் நீ இவ்வளவு பெரியவனாகி விட்டாய. திருக்குர்ஆன் கூட ஓதத் தெரியாது என கூறி விடுவார் என்ற நிலை இருந்தது. இறுதியாக ஒரு திட்டம் தீட்டினேன். எங்கேயாவது திருக்குர்ஆன் தர்ஸ் கொடுக்கப்படுமானால் அங்கு சென்று நானும் கிராஅத்தைக் கேட்பேன். சரியான கிராஅத்துடன் மொழியாக்கமும் கற்றுக் கொள்வேன் என நினைத்தேன். இங்கும் அங்கும் விசாரித்ததில் அஹ்மதிய்யா பள்ளிவாசலை தவிர வேறெங்கும் தர்ஸ் கொடுக்கப்படுவதில்லை என தெரிய வந்தது. நான் எனது உள்ளத்தில் திருக்குர்ஆனை கேட்பேன். அவர்களது கொள்கைகள் மற்றும் போதனைகளைப் பற்றி முற்றிலும் கவனம் செலுத்த மாட்டேன் எனக் கூறினேன். நான் செல்லவிருந்தபோது ஆகா சாஹிப் என்னை தடுத்தார்கள். நீ அங்கு சென்றால் நிச்சயமாக மிர்ஸாயி ஆகி விடுவாய் என்றார்கள். நான் அவர்களுக்கு மிர்ஸாயி ஆவதற்காக போகவில்லை. வெறும் திருக்குர்ஆனை கேட்பதற்காக செல்கின்றேன் என உறுதியளித்தேன். ஆனாலும் அவர் சம்மதிக்கவில்லை. பிறகு நான் மறுநாள் வாய்ப்பு கிடைத்ததும் அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கு சென்றேன். ஹஸ்ரத் மீர் ஹாமித் சா சாஹிப் மர்ஹூம் அவர்கள் அன்றைய நாட்களில் தர்ஸ் கொடுத்து வந்தார்கள். இடைவிடாது நான் ஒவ்வொரு நாளும் தர்ஸில் கலந்து கொள்வேன். அறிவு மற்றும் ஞானத்தைக் கேட்டு வந்தேன். எப்பொழுதெல்லாம் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் காதியானிலிருந்து வந்து தர்ஸ் கொடுப்பார்களோ அப்போதெல்லாம் அவர்களது கண்ணியத்திற்காக அஹ்மதியல்லாத ஆசிரியர்களும் தர்ஸில் கலந்து கொள்வார்கள். எனக்கு எவ்வகையிலும் சிறப்பான தப்லீக் எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் திருக்குர்ஆன் தர்ஸின் இடையிலேயே எனது அனைத்து சந்தேகங்களும் விலகிவிட்டன. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது தொடுக்கக்கூடிய அனைத்து ஆட்சேபனைகளும்

ஆதாரமற்றவை எனவும் இவற்றில் எந்த உண்மையும் இல்லை எனவும் தெரிய வந்தது. இறுதியில் ஹுஸூரிடம் பைஅத்திற்கான கடிதம் எழுதினேன். சில நாட்களுக்குப் பிறகு பைஅத் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான பதில் வந்தது. பிறகு நான் நற்பேறு பெற்றவனாக அஹ்மதிய்யத்தினுள் வந்தேன். நான் அருள்களை எடுத்துரைக்கும் விதமாக இதனை கூற விரும்புகின்றேன். இறைவன் என்னை நல்ல கண்ணியமிக்க குடும்பத்தில் பிறக்கச் செய்தான். டாக்டர் போன்ற கண்ணியமிக்க பணியை செய்ய வாய்ப்பளித்துள்ளான். எனது பெரும்பாலான துஆக்களை ஏற்றுக் கொண்டுள்ளான். எனது அனைத்து தேவைகளையும் நிறைவேற்றியுள்ளான். ரிஸ்க் வழங்கியுள்ளான். பிள்ளைகளை கொடுத்துள்ளான். இவை அனைத்தையும் விட பெரிய அருள் அவன் இறுதிக்காலத்தின் இமாமை கண்டறியக்கூடிய வாய்ப்பு ஆகும். இதன் மூலம் அஹ்மதியான பெருமை கிடைத்தது. ஆகா சாஹிபுடைய கூற்றாகிய நீர் மிர்ஸாயி ஆகி விடுவீர் என்பது உண்மையாகி விட்டது.

கூறுகின்றார்: இறைவனுக்கு நன்றி! நான் நேரான வழியினை அடைந்து விட்டேன். இந்த சில சம்பவங்களை நான் கூறினேன். தற்போது நான் இந்த விசயத்தையும் கூற விரும்புகின்றேன். ஜமாஅத் எவ்வாறெல்லாம் முன்னேற்றப் பாதையை கடக்கின்றதோ, பொறாமைக்காரர்களின், தீயவர்களின் செயல்பாடுகளும் அதிகமாகிக் கொண்டே செல்கின்றன. அவர்கள் பல்வேறு வழிகளில் ஜமாஅத்திற்கு சேதம் விளைவிக்க முயல்கின்றனர். சில சமயங்களில் மறைந்திருந்து தாக்குகின்றனர். சில சமயங்களில் வெளிப்படையாகவும் தாக்குகின்றனர். சில சமயங்களில் அனுதாபம் காட்டியவாறும் தாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

ஆகையால் ஒவ்வொரு அஹ்மதிக்கும் எதிரியின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் தப்பிப்பதற்கு அதிகமாக துஆ செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. அல்லாஹும்ம இன்னா நஜ்அலுக ஃபீநுஹூரிஹிம் வநவூதுபிக மின் ஷுரூரிஹிம் என்ற துஆவும், ரப்பி குல்லு சைய்யின் காதிமுக ரப்பி ஃபஹ்பள்னி வன்ஸுர்னி வர்ஹம்னி என்ற துஆவும் உள்ளது. இதுபோன்ற மேலும் பல துஆக்கள் உள்ளன. உறுதியாக நிலைநிற்றலுக்கான துஆ: ரப்பனா அஃப்ரிக் அலைனா ஸப்ரவ் வஸப்பித் அக்தாமனா வன்ஸுர்னா அலல் கவ்மில் காஃபிரீன். இந்த அனைத்து துஆக்களையும் தரூதையும் நான் ஓதும்படி ஏற்கனவே கூறியிருந்தேன். இவைகளை அதிகமாக ஓதுவது அவசியமாகும். இதன் மூலம் நாம் எதிரியின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க முடியும்.

இதனைப் போன்று கடந்த நாட்களில் ஏதாவதொரு குழப்பவாதி Face book –ல் ஒரு பக்கம் ஹஸ்ரத் பாபா நானக் உடைய படத்தை வரைந்தும் அதனுடன் மற்ற பகுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது படத்தையும் வரைந்து பிறகு ஹஸ்ரத் பாபா நானக் பற்றி மிகவும் மோசமான சிந்தனையை வெளிப்படுத்தியவாறு மிகவும் தவறான தீய வார்த்தைகளை பயன்படுத்தி அன்னாரின் படத்தின் மீது எழுதியுள்ளார். பிறகு அதன் மீது ஒரு அடித்தல் உள்ளது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை புகழ்ந்து வாசகங்களை எழுதியுள்ளார். அவ்வாறு எழுதி ஒப்புமை செய்து அது அசல் ஆகும். இது அதுவாகும்; இதுவாகும் என எழுதியுள்ளனர். இந்த செயலிலிருந்து, அதனை செய்தவரின் நோக்கமும், எண்ணமும் கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்துவதேயாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி புகழ்வது மற்றும் உயர்வை எடுத்துரைப்பது அவரது நோக்கமல்ல. மாறாக சீக்கியர்களின் உணர்வுகளை தூண்டி விடுவதாகும். இதனை விட பெரிய அநியாயம் என்னவென்றால், இதனை அப்படியே அங்குள்ள பத்திரிகை வெளியிட்டுள்ளது. இது காதியான் மற்றும் அதன் அருகாமையில் உள்ள இடங்களில் சீக்கியர்கள் மத்தியில் பெரிய அளவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறிருப்பினும், இறைவனது அருளால் அவர்களது தலைவர்கள் அறிவுடனும், நேர்மையுடனும் செயல்பட்டு அவர்களது உணர்வுகளை தணித்தார்கள். அஹ்மதிகள் இப்படிப்பட்ட செயலைச் செய்யமாட்டார்கள். இது நிச்சயமாக ஏதாவதொரு தீய கெட்ட இயல்பைக் கொண்ட நபர் நாம் சண்டையிட்டுக் கொள்வதற்காக இவ்வாறு செய்திருக்கின்றனர். எனக்கும் காதியானிலிருந்து சில சீக்கிய தலைவர்களின் வீடுகளிலிருந்து கடிதங்கள் வந்துள்ளன. எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. இது யாரோ சேட்டை செய்திருக்கிறார்கள். இதனை ஜமாஅத் அஹ்மதிய்யாவின் பக்கம் திருப்பியுள்ளார்கள். அதாவது இது எவ்வாறு தெரிகிறது என்றால் ஏதாவதொரு அஹ்மதி இதனை எழுதியுள்ளார். அதனை ஜமாஅத் வெளியிட்டுள்ளது போல் தெரிகிறது. ஜமாஅத் இதுபோன்ற வீணான செயலை ஒருபோதும் செய்யாது. எவ்வாறிருப்பினும், அவர்களும் அவர்களது பல்வேறு அமைப்பினரும்

நமது ஜமாஅத்தினரும் அரசாங்கத்திடம் இதனைப் பற்றி ஆராய வேண்டும். குற்றவாளிக்கு கடுமையான தண்டனை அளிக்க வேண்டும் என கேட்டுள்ளனர்.

எப்பொழுதும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இதுதான் கொள்கையாக இருந்து வருகிறது. அதாவது எப்பொழுதும் எவரது உணர்ச்சிகளுடனும் விளையாடக் கூடாது. மார்க்க வழிகாட்டிகளை மட்டுமல்ல. நாம் மற்றவர்களின் சிலைகளைக் கூட தவறாக பேசக் கூடாது என்ற போதனையின்படி செயல்படக் கூடியவர்களாவோம்.

பிறகு ஹஸ்ரத் பாபா நானக் உடைய அந்தஸ்து, கண்ணியம் மற்றும் மதிப்பைப் பற்றி ஜமாஅத் அஹ்மதிய்யா உடைய நூல்களில் வெளிப்படையாக எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி புகழ்ந்து எழுதியுள்ளார்கள். அவர்களைப் பற்றி ஒரு உண்மையான அஹ்மதி இவ்வாறு மோசமான அசிங்கமான வார்த்தையைக் கூற சிந்திக்கக் கூட மாட்டார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் பாபா நானக் சாஹிபைப் பற்றி ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இப்படிப்பட்ட நேரத்தில் இறைவன் பாபா சாஹிபிற்கு உண்மை மற்றும் உண்மையைத் தேடக்கூடிய ஆன்மாவை வழங்கியிருந்தான். அப்போது பஞ்சாபில் ஆன்மீகம் குறைந்து போயிருந்தது. இதிலிருந்து எவ்வித சந்தேகமுமின்றி அவர் உள்ளுக்குள்ளேயே ஓரிறைவனின் பக்கம் இழுத்து செல்லப்பட்டது நிரூபணமாகிறது. அவர் ஒரு இறை அடியார் ஆவார்.

**மற்றோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஒவ்வொரு மூஃமின் மற்றும் முத்தகீன் மீது கடமை என்னவென்றால், அவர்களை அதாவது ஹஸ்ரத் பாபா நானக்கை கண்ணியத்துடன் பார்க்க வேண்டும். தூய ஜமாஅத்தின் தொடர்பில் அவரும் இணைந்தவர் ஆவார் எனக் கருத வேண்டும்.

மேலும் கூறுகின்றார்கள்: பாபா சாஹிப் உண்மையான ஒளியைப் பரப்புவதில் அதாவது நாம் எந்த உண்மையான ஒளியை பரப்புவதற்காக முயற்சிக்கின்றோமோ அதில் பாபா சாஹிபும் அதற்காக உதவி செய்துள்ளார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் நன்றி செலுத்தவில்லை என்றால் சந்தேகமில்லாமல் நன்றி கெட்டவர்கள் ஆகி விடுவோம்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது பணியையும் ஹஸ்ரத் பாபா நானக் சாஹிபின் பணியையும் ஒன்றாகக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் பாபா நானக்கிற்கு எதிராக தவறான வார்த்தைகளை உபயோகிப்பவர் மிகக் கெட்டவர் ஆவார்.

**இன்னோரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது நேர்மை இந்த விசயத்தின் பக்கம் நம்மை கட்டாயப்படுத்துகின்றது. அதாவது சந்தேகமின்றி பாபா நானக் சாஹிப் இறைவன் தனது கைகளினால் ஒளியின் பக்கம் இழுத்த அந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட அடியார்களைச் சேர்ந்தவராவார்கள்.

**பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்:**

நான் சீக்கிய சகோதரர்களுடன் இந்த விசயத்தில் கருத்தொற்றுமை கொள்கிறேன். அதாவது பாபா நானக் சாஹிப் உண்மையில் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியார்களைச் சேர்ந்தவராவார்.

**பிறகு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:** இந்த அறிவிப்பு அங்கு ஜமாஅத் சார்பாக வெளியிடப்பட்டும் உள்து.

பாபா நானக் சாஹிப் உண்மையில் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியார்களைச் சேர்ந்தவராவார். அவர் எவர்கள் மீது இறைவனுடைய அருள்கள் இறங்குமோ அவர்களை சேர்ந்தவராவார். இறைவனது கைகளால் தூய்மை ஆக்கப்படுவார்கள். நான் இப்படிப்பட்ட மக்களை இழிவாகவும், தீய

வார்த்தைகளால் நினைவு கூறக் கூடியவர்களை நான் தீயவர்களாகவும் தரங்கெட்டவர்களாகவும் கருதுகின்றேன். மஹாராஜா ராம் சந்தர் ஜி மஹாராஜா கிருஷ்ணன் ஜி போன்றோர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட தூய மனிதர்கள் ஆவர்.

ஆக, இந்த அறிவிப்பு எவர் அதனை வெளியிட்டாரோ, எவர் அந்தப் படத்தை வரைந்தாரோ தீங்கு மற்றும் குழப்பம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்துள்ளார். காதியானின் அமைப்பாளர்கள் இதற்கு முழுமையான முறையில் மறுப்பை பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார்கள். உண்மையும் இதுவேயாகும். அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களிலிருந்து தெரிய வருகிறது. நம் மத்தியில் ஹஸ்ரத் பாபா நானக் உடைய அந்தஸ்து மிகவும் உயர்வானதாகும். மேலும் நாம் அவர்களை மிகவும் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் தான் பார்க்கின்றோம்.

அல்லாஹ் எல்லா விதமான தீங்கிலிருந்து குழப்பங்களிலிருந்தும் காதியானிலுள்ள அஹ்மதிகளையும், சுற்றுச் சூழலையும் பாதுகாப்பாக வைப்பானாக! எதிரி தனது தீங்கில் தோல்வி அடைவானாக!

தற்போது நான் சில வஃபாத் ஆனவர்களை பற்றி கூறுவேன். அவர்களது ஜனாஸாவும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன்.

முதல் ஜனாஸா **கண்ணியத்திற்குரிய அப்துர் ரசாக் பட் சாஹிப்** உடையதாகும். இவர் அக்டோபர் 6ம் தேதி 2012-ல் 65 வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் ஜமாஅத் முபல்லிக் ஆவார். வஸிய்யத்தும் செய்திருந்தார். இவரது ஜனாஸா தொழுகை சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் வளாகத்தில் தொழ வைக்கப்பட்டது. மருந்துகளின் தவறான உபயோகத்தினால் அவரது இருதயம் பாதிக்கப்பட்டது. அதனால் இவருக்கு மரணம் ஏற்பட்டது. இறை அருளால் ஆரோக்கியமான மனிதராவார். இவரது தந்தையார் பெயர் குலாம் அஹ்மது கஷ்மீர் ஆகும். இவர் குஜராத்தை சேர்ந்தவராவார். சிறு வயது முதலே இவரது தந்தை தொழுகையாளி ஆவார். இந்த காரணத்தினால் தனது சுற்றுப்புறத்தில் மவ்லவி என்றழைக்கப்பட்டார். 1930 -ல் இவர் பைஅத் செய்தார். இவர் பைஅத் செய்த போது இவரது மனைவி இவரை விட்டு விட்டு சென்று விட்டார். அப்போது அவரது அஹ்மதி அல்லாத ஒரு தோழி அவரிடம், உனது கணவர் அஹ்மதியானதும் தொழுவதை விட்டு விட்டாராமே எனக் கேட்டுள்ளார். இவரது மனைவி அதாவது ரசாக் பட் சாஹிபுடைய தாயார் இல்லை. முன்பை விட அதிகமாக தொழுகிறார் என்றார்கள். பிறகு அவர் எவ்வாறு காஃபிர் ஆனார் என்று கேட்டுள்ளார். எவ்வாறிருப்பினும் அவர் திரும்பி வந்து விட்டார்கள். நல்ல இயல்பைக் கொண்ட பெண்மணி ஆவார்.

அப்துர் ரசாக் பட் சாஹிப் ஆரம்பக் கல்வி ஆலம் காட் குஜராத்தில் பயின்றார்கள். பிறகு 1971 -ல் ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்று ஜமாஅத் முரப்பியாக பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் தொண்டாற்றியுள்ளார்கள். பிறகு 1975 -ல் கானாவில் இவர் நியமணம் செய்யப்பட்டார். அங்கு பல இடங்களில் அவர் இருந்தார். 1979 முதல் 1989 வரை அஹ்மதிய்யா மிசனரி டிரைனிங் கல்லூரியில் முதல்வராக தொண்டாற்றுவதற்கு இவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. பிறகு 1989 -ல் பாகிஸ்தான் வந்து விட்டார்கள். பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் முரப்பியாக செயல்பட்டார்கள். இஸ்லாஹ்-வ-இர்ஸாத் மர்களின் கீழ் புதிய அஹ்மதிகள் தர்பிய்யத் பிரிவில் தொண்டாற்றி வந்துள்ளார்கள். சீர்திருத்தக் குழுவிலும் சிறந்து விளங்கினார். இவரது பேசும் தன்மை புரிய வைக்கும் தன்மை மிகவும் அழகாக இருக்கும்.

இவரது மனைவியின் சகோதரர் முபாரக் தாஹிர் சாஹிப் நுஸ்ரத் ஜஹான் செயலர் அவர் எழுதுகிறார். எனது சகோதரி அமத்துன் நூர் தாஹிருக்கு பட் சாஹிப் உடைய சம்பந்தம் வந்தது. எனது தந்தையார் ஹஸ்ரத் மவ்லானா முஹம்மது முனவ்வர் சாஹிப் அவர்கள் அப்போதைய ஹதீகத்துல் முபஷ்ஷிரீன் உடைய செயலராக சேக் முபாரக் அஹ்மது சாஹிப் இருந்தார்கள். அவர்களிடம் ஆலோசனை செய்தார்கள். பட் சாஹிப் தனது பணியில் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை கூறுங்கள் என்றார்கள். சேக் சாஹிப் அவர் நன்றாக பணிபுரிகின்றார். அவருடைய அறிக்கை மகிழ்ச்சி தரக்கூடியதாக உள்ளது. திருப்திகரமாக உள்ளது என்றார்கள். இந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் எனது தந்தையார் இந்த சம்பந்தத்தை முடிவு செய்தார்கள். இவரது பணியை நான் பார்த்துள்ளேன். நான் அவருடன் கானாவில் இருந்துள்ளேன். பணியில் தன்னலமற்று செயல்படுவார்கள்.

மிகக் குறைவான முபல்லிக்குகள் தான் இவ்வாறு பணியாற்றுவார்கள். மனைவி பிள்ளைகளுடன் நல்ல நட்புறவு கொண்டிருந்தார். ஒவ்வொரு ஜுமுஆவிலும் அனைத்து மகள்களையும் விருந்திற்கு அழைப்பார்கள். பிறகு டி.வி.யில் ஜுமுஆ குத்பா அனைவருடனும் உட்கார்ந்து கேட்பார்கள். தாயாருக்கு மிகப்பெரிய அளவில் சேவை செய்துள்ளார்கள். தனது வெற்றியின் காரணியாக எப்போதும் தனது தாயாரையே கூறி வந்தார்கள். எப்பொழுதும் தனது பிள்ளைகளுக்கு தொழுகை மற்றும் துஆவின் பக்கம் கவனமூட்டிக் கொண்டே இருப்பார்கள். தொழக்கூடிய பிள்ளைகளிடம் அதிக அளவு அன்பு, பாசம் காட்டுவார்கள். மகிழ்ச்சியை தெரிவிப்பார்கள். மகள்களுக்கு சம்பந்தம் வந்த போது – இவருக்கு 5, 6 மகள்கள் இருந்தனர். அளவுக்கு அதிகமாக உலகவாழ்க்கையை விரும்பக்கூடிய மக்களுக்கு பொதுவாக இதில் படிப்பினை உள்ளது – எப்பொழுதும் இதனையே கூறுவார்கள். பையன் தொழுகின்றான். சந்தா கொடுக்கின்றான். வேறென்ன வேண்டும் என்பார்கள். மேலும் எனது மகளுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் காலியான வீட்டையும் நிரப்பி விடுவாள். நிரம்பியுள்ள வீட்டையும் காலி செய்து விடுவார்கள். கிலாஃபத்துடன் நல்ல உறுதியான அன்பு இருந்தது.

இவரது மகனுக்கு ஏதோ ஒரு காரணத்தினால் தண்டனை கிடைத்தது. எப்பொழுது வரை மகன் மன்னிக்கப்படவில்லையோ அதுவரை அவரிடம் பேசவேயில்லை. கூறி வந்தார்கள். எவருடன் காலத்தின் கலீஃபா கோபமாக உள்ளார்களோ அவரை நான் எவ்வாறு ஏற்றுக் கொள்வேன் என்று கூறுவார்கள். 2009 –ல் இங்கு வந்தார். அப்போது அவரது மகனுக்கு தண்டனை அளிக்கப்பட்டிருந்தது. அதுபற்றி என்னிடம் பேசவேயில்லை. அவனை மன்னித்து விடுங்கள் அல்லது அவன் செய்தது சரி அல்லது தவறு என்று சிறிய அளவில் சைகை கூட காட்டவில்லை. துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவனுக்கு அறிவை வழங்கட்டுமாக என்று மட்டும் கூறினார். எப்போதும் ஜமாஅத் அமைப்புக்கும் கிலாஃபத்திற்கும் கட்டுப்பட்டு வந்துள்ளார். பிள்ளைகளுக்கும் இதனையே அறிவுறுத்தி வந்துள்ளார். நான் கூறியதுபோன்று குத்பாக்களை தொடர்ச்சியாக பார்க்கக் கூடியவராவார். குழந்தைகள் இந்த சமயத்தில் ஏதாவது சத்தம் போட்டார்கள் என்றால் அதனை விரும்பமாட்டார்கள்.

உடல்நிலை சரியில்லாத நேரத்திலும் பொதுவாக விடுமுறை எடுக்கமாட்டார்கள். விடுமுறை எடுக்கும்படி யாராவது கூறினால் அலுவலகம் சென்று விட்டால் நான் சரியாகி விடுவேன் என்பார்கள். பிள்ளைகள் இன்று விடுமுறையாகும். எங்கேயாவது சுற்றிப்பார்க்க அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினால் எனது வாழ்வு முழுவதும் ஜமாஅத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும் என்பார்கள். நிச்சயமாக இவர்களது இந்த வார்த்தை சாதாரணமாக கூறப்பட்டது அல்ல. அவர் தனது ஒவ்வொரு நொடிப் பொழுதையும் ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தார். மேலும் அதனை செய்தும் காட்டினார்.

நான் கூறியது போன்று ஆப்பிரிக்காவில் நான் அவருடன் இருந்தேன். அன்று இருந்த காலகட்டம் தற்போது போன்று இல்லை. மிகவும் கஷ்டமான காலகட்டமாக அது இருந்தது. அங்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தனது நாட்களை கழித்தார்கள். அதிகமாக நோய்வாய்ப்பட்டு இருப்பார். மலேரியா வந்து விடும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார். சுகமானவுடன் தனது பணியை செய்யத் தொடங்கி விடுவார். அங்குள்ள மக்களிடமும் அன்பு, பாசத்தின் காரணத்தில் மக்கள் இவரை நேசிக்கவும் செய்தனர். நான் அங்கு சென்ற போது இவர் அங்கு ஆரம்பத்தில் மிசனரியாக இருந்தார். அங்குள்ள பல்வேறு விசயங்களைப் பற்றி சூழ்நிலைகளைப் பற்றி கூறினார்கள். அறிவுரை வழங்கினார்கள். இவ்வாறு எனக்கு நல்ல முறையில் வழிகாட்டினார்கள். அல்லாஹ் இவருடன் அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்வானாக! இவர் மீது அருள்களையும் பரக்கத்துகளையும் இறக்குவானாக! தனது அன்பிற்குரியவர்கள் மத்தியில் இவருக்கு இடமளிப்பானாக! இவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு பொறுமையையும் தைரியத்தையும் ஊக்கத்தையும் வழங்குவானாக! இவரது ஒரு மகள் செரோலியோன் முபல்லிக உடைய மனைவி ஆவார். அவர் இவருடைய ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

நான் தற்போது தொழ வைக்கக் கூடிய இரண்டாவது ஜனாஸா **கண்ணியத்திற்குரிய டாக்டர் ஹமீதா முனீர் சாஹிபா** உடையதாகும். தனது 75 வயதில் அக்டோபர் 8ம் தேதி 2012 கனடாவில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1964 –ல் இவர்கள் லாஹூர் பாத்திமா மருத்துவக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்றார்கள். House Job செய்த பிறகு முன்னேற்றத்திற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் ரப்வாவில் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் மகளிருக்கான மருத்துவப் பிரிவில்

மருத்துவருக்கான தேவை இருந்தது. இதனால் அங்கு சென்று விட்டார்கள். 1969 முதலே ரப்வாவில் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் மருத்துவராக சேர்ந்தார்கள். இவர்கள் மிக நீண்ட காலம் தொண்டாற்றி உள்ளார்கள். இவரது தொண்டுகளைப் பற்றி கூற வேண்டுமானால் ஒருவேளை ஒரு குத்பா முழுவதும் தேவைப்படலாம். மாறாக அதனை விட அதிகமாக தேவைப்படலாம்.

1964 -ல் லாஹூரின் H.C.N. மருத்துவமனையில் House Job செய்து கொண்டிருந்தார்கள். இந்த சமயத்தில் இங்கிலாந்தில் வேலைக்காக விண்ணப்பம் செய்தார்கள். அதில் அவருக்கு வேலை கிடைத்தது. டிக்கெட்டிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இங்கிலாந்து செல்வதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் முழுமை அடைந்தன. மறுநாள் அல் ஃபஸ்ல் வீட்டிற்கு வந்தது. அதில் ரப்வாவில் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் பெண் மருத்துவர் தேவை என விளம்பரம் வந்திருந்தது. அதனுடன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய தூதுச் செய்தியில் இருந்தது. அதாவது அஹ்மதி பெண் மருத்துவர் யாரும் வரவில்லையென்றால் பிறகு ஏதாவது கிறிஸ்தவ பெண் மருத்துவர் ஏற்பாடு செய்யுங்கள் என கூறப்பட்டிருந்தது. இவர் இலண்டன் செல்ல வேண்டிய நிகழ்ச்சியை நிறுத்தினார். வீட்டில் கஷ்டமான சூழலிலும் இவருக்கு 10 சகோதர சகோதரிகள் இருந்தனர். இவரது தந்தை Section Officer ஆக இருந்தார். இருந்தபோதிலும் பொருளாதார கஷ்டம் நிலவி வந்தது. இவரது தந்தை இவரை கடன் வாங்கித்தான் மருத்துவருக்கு படிக்க வைத்தார். இந்நிலையில் அதே நாளில் லாஹூரிலிருந்து ரப்வா வருவதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தார். House Job செய்த மருத்துவமனைக்கு சென்று M.S இடமிருந்து அனுமதி கேட்டார்கள். M.S. அவர்களிடம் அங்கு ஏன் செல்கின்றீர்கள்? உங்களுக்கு அங்கு என்ன சம்பளம் கிடைக்கும் எனக் கேட்டார். அதற்கு மருத்துவர் ஹமீதா சாஹிபா கூறினார்கள். ஒருவேளை மாத சம்பளம் 230 ரூபாய் கிடைக்கும் என்றார்கள். அதற்கு M.S.உங்களுக்கு நான் 550 ரூபாய் மாத சம்பளமாக வாங்கித் தருகின்றேன். லாஹூரை விட்டு செல்லாதீர்கள் என்றார்கள். உங்களுடைய வருங்காலமும் இந்த House Job தான் சார்ந்துள்ளது. அவர்கள் இந்த offer ஏற்றுக் கொள்ளவில்லை. நான் பணத்திற்காக அங்கு செல்லவில்லை. என்னிடம் இங்கிலாந்தின் வேலைக்குரிய வவுச்சரும் உள்ளது. டிக்கெட்டிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டு விட்டது. இந்த அனைத்தும் விட்டு விட்டு நான் ரப்வா செல்கின்றேன் என்றார். அதற்கு M.S. நீங்கள் எவ்வளவு மகத்தான பெண்மணி ஆவீர்கள். தனது ஜமாஅத்திற்காக தனது வருங்காலத்தை தியாகம் செய்து விட்டீர்கள். M.S. இவர்களுக்கு House Job ற்கான ஒரு சிறந்த சான்றிதழை வழங்கினார்கள். 1964 -ல் ரப்வா வந்தார்கள். 1983 வரை ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் பெண் மருத்துவராகப் பணியாற்றினார்கள். ரப்வாவில் அந்தக் காலத்தில் பெண் மருத்துவர் யாரும் கிடையாது. அருகிலுள்ள பகுதிகளிலும் எந்தவொரு பெண் மருத்துவரும் கிடையாது. மிகப்பெரிய பகுதியை இவர்கள் தனது காலத்தில் தனியாக கவனித்து வந்தார்கள். இரவு 2.00 மணியானாலும் 3.00 மணியானாலும் குளிராக இருந்தாலும் வெயிலாக இருந்தாலும் எந்தவொரு நோயாளி வந்தாலும் உடனே தனது படுக்கையை விட்டு எழுந்து நோயாளியை சந்திக்கச் செல்வார்.

இவரைப் பற்றி இவ்வாறும் கூறுகின்றார்கள். இவர்களது வலிமா நாளன்று மணப்பெண்ணாக மேடையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது மருத்துவமனையிலிருந்து அவசரம் என அழைப்பு வந்தது. உடனேயே தனது அதே ஆடையுடன் எழுந்து மருத்துவமனைக்கு சென்றார்கள். பிறகு விருந்தினர்கள் அவர் இல்லாமலேயே உணவு உண்டார்கள்.

எவ்வாறிருப்பினும் இது தியாகத்தின் உணர்வாகும். தனது வக்ஃபின் உணர்வுடன் தனது இந்த சேவையின் வாக்குறுதியை நிறைவேற்றினார்கள். அல்லாஹ் மற்ற வாக்ஃபீன்களுக்கும் இதுபோன்ற அர்ப்பண உணர்வை நிலைநாட்டுவதற்குரிய வாய்ப்பினை வழங்குவானாக! ஏழைகளுக்கு அதிக அளவு உதவி செய்து வந்தார்கள். இலவசமாக அவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்தார்கள். அங்குள்ள பகுதியில் மக்கள் பொய்யாக தனது கஷ்டங்களை கூறுவது வழக்கமாகும். அவர் பொய்யரா உண்மையாளரா என்பதைஆராய்வேன் என ஒருபோதும் கூறியதில்லை. யார் எதனை கூறினாலும் அதனை நம்பி விடுவார்கள். இலவசமாக சிகிச்சையும் அளிப்பார்கள். மருந்துகளையும் கொடுப்பார்கள்.

அவரது கணவர் கூறுகின்றார்: பலமுறை இவ்வாறு நடந்துள்ளது. அதாவது இரவினை மருத்துவமனையிலேயே கழித்து விடுவார்கள். காலையில் கணவர் வேலைக்குப் போகும் போது அவர் மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருப்பார்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், இவர்களை பர்தாவிற்கு ஒரு உதாரணமாக கூறியுள்ளார்கள். ஒருமுறை மஜ்லிஸே ஷூராவில் யாராவது பர்தாவில் இருந்தவாறு வேலை செய்ய கற்க வேண்டும் என்றால் டாக்டர் ஹமீதாவிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் சிறந்த தியாகங்களைச் செய்யக் கூடிய பெண் ஆவார் என கூறியுள்ளார்கள். மிகவும் குறைவான மக்களுக்கு தான் இந்த நற்பேறு கிடைக்கும்.

இவர் 1964 –ல் மருத்துவமனையில் சேர்ந்த போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திக்க சென்றார்கள். சின்ன சகோதரி ஹஸ்ரத் உம்மே மத்தீன் சாஹிபா ஃபஸ்லே உமர் மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் வந்து விட்டார்கள் என்றார். இரண்டாவது கலீஃபா அவர்கள் உடனே அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி இவர்களுக்காக துஆ செய்தார்கள்.

ஒருமுறை மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திக்கும் போது நான் இஃதிகாஃப் உட்கார விரும்புகிறேன் என்றார்கள். அப்போது அவர்கள், என்னுடைய நோயாளிகளை கவனியுங்கள். நான் உங்களுக்காக அதிகமாக துஆ செய்கின்றேன். உங்களுடைய இஃதிகாஃப் இதுவேயாகும் என்றார்கள்.

அவர்களுக்கு கிலாஃபத்துடன் நல்ல தொடர்பு இருந்தது. மிகவும் தைரியமிக்க பெண் ஆவார்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு இவர்களது கவிதைகள் மிகவும் பிடிக்கும். இவர் மருத்துவர் மட்டும் அல்ல. மாறாக நல்லவொரு கவிஞரும் ஆவார். உறுதியானவரும் நிலையானவரும் உணர்ச்சிப்பூர்வமானவரும் ஆவார். இவரது 7 கவிதை தொகுப்புகள் அச்சிடப்பட்டுள்ளன. ஒருமுறை ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் இங்கு வந்த போது தனது ஒரு கவிதை தொகுப்பை அனுப்பினார்கள். அதன் ஒரு கவிதை இதுவாகும். வீடு பூட்டி கிடக்கிறது நீண்ட காலமாக அவரிடம் தனது வீட்டிற்கு வருமாறு கூறுங்கள்.

ஹுஸுர் (ரஹி) அவர்கள் இந்த கவிதையை மிகவும் பாராட்டினார்கள். டாக்டர் ஹமீதா உடைய கவிதைகள் வயதான பாட்டிகளைப் போன்று என்னை அதட்டுவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்றார்கள். எப்பொழுதும் தனது பிள்ளைகளுக்கும், தனது சகோதர சகோதரிகளுக்கும் அறிவுரை வழங்கினார்கள். உலகில் கண்ணியம் வேண்டுமென விரும்பினால் கிலாஃபத்துடன் இந்த அளவு தொடர்பு கொள்ளுங்கள். எந்த அளவுக்கு என்றால் தன்னை இந்த வழியில் மாய்த்து விடுங்கள் (என்று கூறுவார்கள்).

தற்போது ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் மருத்துவராக உள்ள டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்:

இவர் மிகவும் பொறுமையுடைய நல்லொழுக்கமுள்ள பெண்மணி ஆவார். அப்போது மிகவும் கஷ்டமாக காலமாகும். வசதி வாய்ப்பு எதுவும் அப்போது கிடையாது. மிகவும் உறுதியுடனும் உழைப்புடனும் இவர் பணியாற்றினார். தனது வேலையில் மிகச்சிறந்த தேர்ச்சி பெற்றவர் ஆவார். நோயாளிகளுடன் அன்புடனும் பணிவுடனும் பரிமாறுவார். இவரது நோயாளிகள் இன்றும் இவரை நினைவு கூறுவர். தற்போது அங்கு டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா இருக்கிறார்கள். அவர்களும் இறை அருளால் வக்ஃபின் உணர்வுடன் பணியாற்றுகின்றார். அல்லாஹ் அவர்களுக்கும் நீண்ட ஆயுளையும் உடல் ஆரோக்கியத்தையும் வழங்குவானாக!

ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் மருத்துவர்களின் தேவைகளை நிறைவேற்றுவானாக! அங்குள்ள சில மருத்துவர்கள் அவர்களது கையில் ஷிஃபாவை வழங்குவானாக! இவர்களுக்கு தைரியத்தை வழங்குவானாக! டாக்டர் நுஸ்ரத் ஜஹான் துஆவை வேண்டியவர்களாக உள்ளார்கள்.

ஒருமுறை கவிதைப் போட்டி நடைபெற்றது. அதில் 1 வரி மட்டும் கொடுக்கப்படும். அதில் கவிதைகள் எழுதக்கூடிய போட்டியாகும். அதில் பெயர் முகவரி போன்றவற்றை எழுத வேண்டியதிருந்தது. இவர் தன்னடக்கம் கொண்டவர் ஆவார். இவர் பெயர் மற்றும் முகவரி எழுத வேண்டிய இடத்தில் படைப்பினங்களுக்குத் தொண்டு, எழுதுவது எழுதச் செய்வது, வீட்டு பராமரிப்பு, முடிவு நல்லதாக அமைவதற்கு துஆ என எழுதினார்கள். இது வெறும் வார்த்தைகள் மட்டும் கிடையாது. நான் கூறியது போன்று சுயநலமற்ற பெண்மணி ஆவார். சுயநலமில்லாமல் இவர்கள் தொண்டாற்றியுள்ளார்கள்.

இவர்கள் தனது வாழ்வின் சுருக்கத்தை எடுத்து வைத்துள்ளார்கள். இவர்கள் நிச்சயமாக படைப்பினங்களுக்கு தொண்டு செய்யக்கூடியவர் ஆவார். வீட்டை பராமரிப்பவர் ஆவார். மறுமையினை நாடியவராக இருந்தார். மனிதனுக்கு நன்மை பயக்கும் நபராக திகழ்ந்தார். இவருக்கு நல்லதாக முடிவு ஏற்பட்டுள்ளது என நான் நினைக்கின்றேன். ஏனென்றால் ஹதீஸில் அடிப்படையில் மக்கள் ஒருவரை புகழ்ந்தால் அவருக்கு சுவர்க்கம் வாஜிப் ஆகி விடும். இவரும் அந்த நபர்களைச் சேர்ந்தவராவார். அல்லாஹ் மர்ஹூமாவுடைய தர்ஜாவை உயர்த்திக் கொண்டே செல்வானாக! இவர்களது பிள்ளைகளிடம் இவர்களது நன்மையை தொடரச் செய்வானாக! இவரது கணவருக்கு தைரியத்தையும் ஆறுதலையும் வழங்குவானாக!

ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைக்கப்படும். மூன்றாவது ஜனாஸா **மதிப்பிற்குரிய சரீப் சாஹிபுடைய மகள் நாஸிரா பேகம்** உடையதாகும். இவர் அப்துல் காதிர் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் டாக்டர் அக்கீல் சாஹிபுடைய மனைவி ஆவார். இவர் ஹைதராபாத்தைச் சேர்ந்தவராவார். தற்போது நார்வேயில் வசித்து வருகிறார்கள். செப்டம்பர் 23ம் தேதி 2012ல் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவரது தாயார் பாத்திமா ஜமீலா சாஹிபா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மனைவி ஹஸ்ரத் ஸய்யிதா சாரா பேகம் உடைய மாமி மகள் ஆவார். அல்லாஹ் இவரது தந்தை கண்ணியத்திற்குரிய முஹம்மது சரீப் சாஹிப் மர்ஹூமிற்கு 13 வயதில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு அளித்தான். இதன் மூலமாக அவர்களுக்கு சிறு வயதிலேயே பலவிதமான துன்பங்களையும் துயரங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. மர்ஹூமாவுடைய திருமணம் 1949 -ல் டாக்டர் அக்கீல் இப்னு அப்துல் காதிர் சாஹிபுடன் நடைபெற்றது. இவர் பேராசிரியர் அப்துல் காதிர் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய மனைவி ஹஸ்ரத் ஸய்யிதா சாரா பேகம் சாஹிபாவுடைய பெரிய அண்ணன் ஆவார். சிறந்த விருந்தோம்பல் செய்யக்கூடிய பெண்மணி ஆவார். தனது கணவர் டாக்டர் அக்கீல் சாஹிபிடம் வரக்கூடிய எண்ணற்ற விருந்தினர்களை அன்பர்களை உளப்பூர்வமாக தொண்டு செய்தார்கள். தொழுகையை முறையாக தொழுபவர். தஹஜ்ஜுத் தொழக்கூடியவர் நெகிழ்வுடன் பழகக் கூடியவர் ஏழைகளுக்கு உதவக் கூடியவர். அறிவான பெண்மணி ஆவார். இவர்களது குடும்பமும் அறிவுள்ள குடும்பமாகும். மாசா அல்லாஹ். தேவையுடையவருடைய தேவையை நிறைவேற்ற வேண்டும் என முயற்சியிலேயே இருந்து வந்தார்கள். அவர்கள் தேவையுடையவர்கள் தனது கஷ்டத்தை வெளிப்படுத்தி விடக்கூடாதே என நினைப்பார்கள். ஒவ்வொரு வேலையையும் கற்றுக் கொள்ள ஆர்வம் கொண்டவராக இருந்தார். இவர் அதப் உடைய தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். பிள்ளைகளை உயர்வான படிப்புகள் படிக்க முயற்சிகள் செய்துள்ளார். 1985 -ல் தனது கணவரின் சஹாதத்தினால் ஏற்பட்ட காரணங்களினால் 1987 -ல் நார்வே ஹிஜ்ரத் செய்ய வேண்டியதிருந்தது. அப்போது அவர்களுக்கு 60 வயதாகும். அதிக இரத்தக்கொதிப்பு உடைய நோயாளி ஆவார். இவ்வாறிருந்தும் நார்வே மொழியினை கற்பதற்கு முயற்சி செய்துள்ளார். ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் அதிகமான அன்பு கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்கள் ஜமாஅத்தின் நூல்கள் போன்றவற்றை எப்போதும் படித்து வந்தார்கள். சந்தாக்களை சரியான நேரத்தில் கொடுப்பதை கவனத்தில் வைத்திருப்பார். இவரது இரண்டு மகன்கள் மருத்துவர்கள் ஆவர். 1 மகளும் உள்ளார். அல்லாஹ் இவர்களது பிள்ளைகளிடமும் இவர்களது நன்மையை தொடரச் செய்வானாக! இவரது தர்ஜாவை உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.

**ON 12.10.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005.

TELEFAX : 0462 - 2352456